[1973 நவம்பர் 30

மாண்புமிகு திரு. க. இராசாராம்: வீட்டினுடைய விலையும் வீடு கட்டுகிற நிலைமையும், காலத்திற்கேற்றவாறு நிலத்தினுடைய விலையும் மாறிமாறி இருந்து வருவதும், தொழிலாளர்களுக்கான கூலி அதிகப்பட்டு வருவதும், வீடுகளிலே அதிகப்படியான வசதிகள் செய்யப்பட்டு வருவதாலும், ஆண்டுக்காண்டு நிலைமைகள் மாறி மாறி வருவதாலும், எல்லா வீடுகளுக்கும் ஒரே மாதிரி நிர்ணயம் செய்வது இயலாத காரியம். இது ஹவுசிங் போர்டு என்ற தனி நிறுவனம் வசூலிக்கிற காரியம். இதிலே அரசு தலையிடுவது கூட அவ்வளவு சரியாக இருக்காது என்று கருதுகிறேன்.

ஊராட்சிகளில் வீட்டுவசதித் திட்டங்கள்.

* 530 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வீட்டு வசதி இல்லாத டவுன் பஞ்சாயத்துகளில் வீடுகள் கட்டி வாடகைக்கு கொடுக்க அரசாங்கத்திடம் செயல் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, (அ) வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக டவுன் பஞ்சாயத்துக்களிலே வீடு கட்டும் திட்டம் செயல்பட்டு வருகிறது.

(இ) இதிலே செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மேன்மையூரிலும், கோவையிலுள்ள அன்னூரிலும், வேலியம்பாடியிலும், சேலத்திலுள்ள ஆத்தூரிலும் இந்தக் கிராமங்களில் எல்லாம் டவுன் பஞ்சாயத்துகளுடைய வீடுகள் தற்பொழுது கட்டப்பட்டு வருகின்றன.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, இதை மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்துவதற்கு அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா? இந்த ஆண்டு இதற்கு ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, பல்வேறு திட்டங்களின் மூலமாக, வீடுகளை கிராமங்களிலே, டவுன் பஞ்சாயத்துக்களிலே கட்டிக்கொள்ளலாம். உதாரணத்திற்கு,

1973 நவம்பர் 30]

கூட்டுறவு வீடு கட்டுகிற சங்கங்களின் மூலமாக ரூ. 25,000 வரை வீடுகட்டிக்கொள்ள கடன் தரப்படுகிறது. ரூரல் ஹவுசிங் ஸ்கீம் மூலமாக, ரூ. 5,000 வரை வீடுகட்டிக்கொள்ள கடன் தரப்படுகிறது. ஆகவே, அந்த வசதிகளை வைத்துக்கொண்டு வீடுகளை டவுன் பஞ்சாயத்துக்களிலே கட்டிக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, இந்த வீட்டு வசதி வாரியம், ஏராளமான வீடுகளை நமது மாநிலத்திலே கட்ட வேண்டி இருக்கிறது. அதிலே, கிராமங்களிலே வீடு கட்டுவதற்கான திட்டங்கள் அரசாங்கத்திடம் இருக்கின்றதா? கிராமங்களிலே இருக்கிற சாதாரண ஜனங்களுக்கு இலவசமாக நிலம் கொடுத்து, அங்கே வீடு கட்டுவதற்கான ஒரு திட்டம் இருப்பதாக செய்திகள் வந்துகொண்டிருக்கின்றனவே, அவைகள் உண்மை தானா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, கிராமங்களிலே தனியாக வீடு கட்டுகிற திட்டம் ஒன்றும் தற்பொழுது அரசிடத்திலே இல்லை. ஆனால், கிராமங்களிலே வீடு கட்ட ரூ. 67 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. 5 சென்ட் வரை நிலம் வைத்திருக்கிறவர்கள் ரூ. 5,000 வரை கடன் பெற்று வீடு கட்டிக்கொள்ளலாம். அரசு ஏராளமான வீட்டு மனைப் பட்டாக்களை ஏழைகளுக்கு வழங்கியிருக்கிறது என்பதை கனம் உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன்.

[முற்பகல் 10-00]

மணல்மேடு கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர்கள்.

* 531 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம்-மணல்மேடு கூட்டுறவு நூற்பாலையில் 1973-ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதத்தில் அதன் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.